தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

11.02.2013 A.M

## விவசாயிகள் கடன் மீண்டும் தள்ளுபடி?



தேவைப்பட்டால் விவசாயிகள் கடனை மீண்டும் தள்ளுபடி செய்வது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று மத்திய நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சர் சச்சின் பைலட் தெரிவித்தார்.

குர்காவ்னில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் சங்க நிகழ்ச்சியில் அவர் பேசியது: கடந்த எட்டு ஆண்டுகளில் விவசாயிகள் நலனுக்காக பல்வேறு சலுகைகளை மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு (யுபிஏ) மேற்கொண்டுள்ளது. விவசாயிகள் நலனுக்கு துணை நிற்கும் கட்சியாக காங்கிரஸ் எப்போதும் திகழும். இதைக் கருத்தில் கொண்டே முந்தைய ஆட்சிக் காலத்தில் ரூ. 70 ஆயிரம் கோடி விவசாயக் கடன் ரத்து செய்யப்பட்டது. கடனை திரும்பச் செலுத்த முடியாமல் தவித்த லட்சக்கணக்கான விவசாயிகள் இதனால் பலனடைந்தனர்.

விவசாயிகள் நலனை எப்போதும் கருத்தில் கொண்டு செயல்படும் அரசாக மத்திய அரசு உள்ளது. தேவைப்பட்டால் மத்திய அரசு மீண்டும் விவசாயிகள் கடனை ரத்து செய்யத் தயங்காது. இது குறித்து அரசு பரிசீலிக்கும் என்றார்.

ராஜஸ்தான் மற்றும் பைலட்டின் தொகுதியைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இங்குள்ள கோல்ஃப் மைதானத்தில் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சரும் சச்சின் பைலட்டின் தந்தையுமான ராஜேஷ் பைலட்டின் உருவச் சிலையை ஹரியாணா முதல்வர் பூபிந்தர் சிங் ஹூடா திறந்துவைத்தார்.

காங்கிரஸ் கட்சி மட்டும்தான் இளைஞர்களுக்கு அரசில் முக்கியத்துவம் அளிக்கும் கட்சி என்று குறிப்பிட்ட சச்சின், ராகுல் காந்திக்கு கட்சியின் துணைத் தலைவர் பதவி அளிக்கப்பட்டதை சுட்டிக் காட்டினார்.

## சென்னையில் கோடையை வரவேற்கும் தர்பூசணி



கோடைக்காலம் தொடங்குவதற்கு முன்பே கோடையை வரவேற்கும் வகையில் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தர்பூசணி மற்றும் கிர்ணி பழங்கள் வரத்து தொடங்கியுள்ளன.

ஆண்டுதோறும் மார்ச் மாத இறுதியில் இருந்து கோடைக்காலம் தொடங்கும். கோடையில் வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்க, தாகத்தைப் போக்க சாலை ஓரங்களில் தர்பூசணி, கிர்ணி பழம் சர்பத், சாத்துக்குடிச்சாறு போன்றவற்றின் விற்பனை சூடுபிடிப்பது வாடிக்கை.

இந்தாண்டு கோடைக்காலம் தொடங்கும் முன்னரே கோடையை வரவேற்கும் விதமாக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் தர்பூசணி மற்றும் கிர்ணி பழங்களின் வரத்து தொடங்கியுள்ளது.

இது குறித்து கோயம்பேடு பழக்கடை சங்கத் தலைவர் ஜெயராமன் கூறியது: கோயம்பேடு மார்கெட்டுக்கு தர்பூசணி பழங்கள் சீர்காழி, சிதம்பரம், மாயவரம், ஆந்திர மாநிலம் நாகலாபுரம், சத்தியவேடு, மதனபள்ளி, பழமநேரு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கொண்டுவரப்படுகின்றன.

ஒரு கிலோ தர்பூசணி ரூ.25: கடந்த சில தினங்களுக்கு முன்பு தான் தர்பூசணி பழங்கள் வரத் தொடங்கின. நாள் ஒன்றுக்கு 2 லாரிகள் மட்டுமே வந்த நிலையில், தற்போது 7 முதல் 10 லாரிகள் வரை வருகின்றன.

மொத்த விற்பனை விலையில் ஒரு கிலோ தர்பூசணி ரூ.25 முதல் 30 வரை விற்கப்படுகிறது. சில்லறை விலையில் ஒரு கிலோ ரூ.40-க்கும் ஒரு பழம் ரூ.60 முதல் ரூ. 80 வரையிலும் விற்கப்படுகிறது.

அதே போல் ஆந்திர மாநிலம் கடப்பா பகுதியில் இருந்து கிர்ணி பழங்கள் வரத்து தொடங்கியுள்ளது. ஒரு கிலோ கிர்ணி பழம் ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்கப்படுகிறது. கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தர்பூசணி பழங்கள் 30 முதல் 50 லாரிகள் வரை வரத்து அதிகரிக்கும் போது ஒரு கிலோ ரூ.10 வரை விற்கப்படும். மேலும் தர்பூசணி சீசன் ஆண்டுக்கு 60 முதல் 90 நாட்கள் வரை மட்டுமே இருக்கும் என்றார் அவர்.

கோயம்பேட்டில் பழங்களின் விலை (சில்லறை விலை ஒரு கிலோ): ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, ஆப்பிள் ரூ.120-140, மாதுளை ரூ.120- 140, சப்போட்டா ரூ.30-40, ஆரஞ்சு ரூ.40-60, சாத்துக்குடி ரூ.30-40, இலந்தை ரூ. 15-20, கொய்யா ரூ.30-40, அன்னாச்சி பழம் ரூ.25-30 வரை விற்கப்படுகிறது.

## நகை, பயிர்க்கடன் வட்டியை அரசு ஏற்க விவசாயிகள் வலியுறுத்தல்

விவசாயிகள் கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கியுள்ள நகை மற்றும் பயிர் கடன்களுக்கான வட்டியை முழுமையாக அரசு ஏற்க வேண்டும் என இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச்செயலர் ஆர்.விருதகிரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், பேரவையில் முதல்வர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிப்புகளில் பெரும்பாலானவை வரவேற்புக்குரியது. இந்த அறிவிப்பில் 50 சதவீத மகசூல் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு மட்டும் இழப்பீடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாகுபடி இழப்புக்கு வரம்பு நிர்ணயிக்காமல் அனைத்து விவசாயிகளுக்கும் ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரசு வேலை, குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்க வேண்டும்.

டெல்டா பாசனம் அல்லாத பிற மாவட்டங்களில் விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு அரசியல் தலையீடு இல்லாமல் உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும்.

கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கியுள்ள நகை, பயிர்கடன்களுக்கான வட்டியை முழுமையாக ஏற்றுக் கொண்டு புதிய கடன் வழங்க வேண்டும்.

காவிரியில் இருந்து வீணாக கடலில் கலக்கும் 24 டிஎம்சி தண்ணீரை சேமிக்க தடுப்பணைகள் கட்ட வேண்டும். ஏரி, குளங்கள் சீரமைக்கும் பணிகளை விவசாயச் சங்கங்களிடம் அளிக்க வேண்டும்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு முழுமையான கூலி கிடைப்பதை உறுதி செய்யவேண்டும் என்றார் அவர்.

### மலிவு விலை அரிசி கிடைப்பதில் சிக்கல்

விழுப்புரம் மாவட்டத்துக்கு, இம்மாதத்துக்கான மலிவு விலை அரிசி ஒதுக்கீட்டைப் பெற்றுத்தர கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனத்தெரிகிறது. இதனால் பல்பொருள் அங்காடிகளில் இம்மாதத்துக்கான அரசின் மலிவு விலை அரிசி விநியோகிக்கப்படவில்லை. அரிசி விலை கடுமையாக உயர்ந்து வரும் நிலையில், மலிவு விலை அரிசி கிடைக்காதது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால், விவசாயம் பாதித்து கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் 5 லட்சம் ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி நடப்பாண்டில் குறைந்துள்ளது.

இதை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் அரிசி விலை உயர்வை கட்டுக்குள் வைத்திருப்பதற்காக கடந்த டிசம்பர் மாதமே, மேற்கு வங்கத்திலிருந்து அரிசி கொள்முதல் செய்து ரேஷன் கடைகளில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய உத்தரவிட்டார். இந்த அரிசியை கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்யவும் உத்தரவிடப்பட்டது.

அதன்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசியை கொள்முதல் செய்து, அந்தந்த மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் பல்பொருள் அங்காடிகளில் 1 கிலோ ரூ. 31 வீதம் 25 கிலோ மூடைகளாக வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்துக்கு 14,000 டன் சாப்பாட்டு புழுங்கல் அரிசியும், 1,000 டன் இட்லி அரிசியும் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து முதல்வர் அறிவிப்பு வெளியிட்டபோதும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கூட்டுறவு பல்பொருள் அங்காடியில் அரிசி விற்பனை செய்வது குறித்து எந்த அறிவிப்பையும் மாவட்ட நிர்வாகம் வெளியிடவில்லை. எனினும், கடந்த ஜனவரி மாதம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 5 கூட்டுறவு பல்பொருள் அங்காடிகளில் மலிவு விலை அரிசி மூடைகள் விற்றுத்தீர்ந்தன.

தற்போது அரிசி விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஓரளவு தரமான அரிசி ரூ.40க்கு கீழ் இல்லாத நிலையில், அரசு வழங்கும் மலிவு விலை அரிசிக்கு மக்களிடம் அமோக வரவேற்பு உள்ளது.

இந்நிலையில், பிப்ரவரி மாதத்துக்கு விழுப்புரம் மாவட்டத்துக்கான ஒதுக்கீட்டை பெற வேண்டிய தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக்கழகம் இன்றுவரை அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியது: கடந்த மாதம் சண்டிகரிலிருந்து, 14,000 டன் சாப்பாட்டு அரிசியும், இட்லி அரிசியும் விழுப்புரம் மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டது. நாங்கள் கூட்டுறவுத் துறை அங்காடிகளுக்கு ஒதுக்கீட்டின்படி வழங்கிவிட்டோம். பிப்ரவரி மாதத்துக்கான தேவை குறித்து கூட்டுறவுத் துறைக்கு கேட்டு கடிதம் அனுப்பிவிட்டோம். அவர்கள் இதுவரை எங்களுக்கு பதில் அனுப்பவில்லை என்றார்.

இது குறித்து கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியது: கடந்த மாதம் எங்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திலிருந்து, 13,899 டன் சாப்பாட்டு அரிசி, 975 டன் இட்லி அரிசி வழங்கப்பட்டது. இவை மாவட்டத்திலுள்ள 5 பல்பொருள் அங்காடி மூலம் விற்பனை செய்யப்பட்டது. இதில் கிராமப்பகுதியிலுள்ள கடைகளில் 4,000 கிலோ இருப்பு இருந்தது அதையும் திரும்ப எடுத்துவிட்டோம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திலிருந்து எந்த கடிதமும் வரவில்லை.  கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மை மையங்களின் மூலம் விற்பனை செய்யலாம். இதற்கு அனுமதி கேட்டுள்ளோம். அரசு திட்டத்தை செயல்படுத்தியாக வேண்டும். தேவை குறித்து கேட்டிருந்தால் அனுப்பி வைத்திருப்போம் என்றார்.

வெளிச்சந்தையில் அரிசி விலை கடுமையாக உயர்ந்து வரும் நிலையில், பல்பொருள் அங்காடிகளில் இம்மாதத்துக்கான மலிவு விலை அரிசி கிடைக்காதது விழுப்புரம் மாவட்ட மக்களை கடும் அதிருப்திக்குள்ளாக்கி உள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மார்ச் 5}ல் ஆர்ப்பாட்டம்: கரும்பு விவசாயிகள் முடிவு

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்க வலியுறுத்தி, மார்ச் 5ம் தேதி சர்க்கரை ஆலைகள் முன்பு தொடர் முழக்கப் போராட்டம் நடத்தப்படும் என்று

உளுந்தூர்பேட்டையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மாநில நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு சங்கத்தின் மாநில தலைவர் பழனிசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் ரவீந்திரன் சிறப்புரையாற்றினார். இதில் மாநில செயலாளர்கள் சீனிவாசன், ராதாகிருஷ்ணன், பொருளாளர் சின்னப்பா மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த ஆண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.100 உயர்த்தி ரூ.2100 என அரசு அறிவித்தது. நடப்பு அரவை ஆண்டிற்கு மத்திய அரசு ரூ.250 உயர்த்தி அறிவித்தது. அந்த ரூ.250ஐ உயர்த்தி மாநில அரசு ரூ.2,350 என அறிவித்தது.

எனினும், மாநில அரசின் பரிந்துரை விலை கரும்பு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளித்தது. உற்பத்தி செலவே டன் ஒன்றுக்கு ரூ.2600 ஆகிறது. எனவே, கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்கிட வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ரங்கராஜன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு அமுல்படுத்தக்கூடாது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மார்ச் 5-ம் தேதி புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் அனைத்து கரும்பு ஆலைகள் முன்பும் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடத்துதல் உட்பட பல்வேறு தீரமானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கப் பயிற்சி

கொடைக்கானலில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

அட்மா திட்டத்தின் கீழ், வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின் மூலம், விவசாயக் கருவிகள் பயன்பாடு மற்றும் பராமரிப்பு பற்றிய செயல் விளக்கப் பயிற்சி முகாம், செண்பகனூர் பகுதியில் நடத்தப்பட்டது.

முகாமுக்கு, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் சின்னராஜ் தலைமை வகித்தார். வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் ஜான் விசைத் தெளிப்பான், புல்வெட்டும் கருவி, மரம் வெட்டும் கருவி போன்றவற்றின் செயல் விளக்கம் குறித்து விளக்கினார். உதவி இயக்குநர் சின்னராஜ், வேளாண் கருவிகளை மானியத்தில் பெறுவது குறித்து விளக்கினார்.

## விவசாய அபிவிருத்திக்கு மேம்பாட்டுத் திட்டங்கள்: அமைச்ச

தமிழகத்தில் விவசாய அபிவிருத்திக்கு பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை, மாநில அரசு செயல்படுத்தி வருவதாக நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

தேனியில் அதிமுக விவசாயப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அதிமுக விவசாயப் பிரிவு மாநிலத் தலைவர் துரை.கோவிந்தராஜன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விவசாயப் பிரிவு செயலர் கு. தங்கமுத்து, மாவட்ட விவசாயப் பிரிவு செயலர் ஜி.வரதராஜன், மாவட்ட அதிமுக செயலர் டி.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிதியமைச்சர் பேசியது:

அதிமுக ஆட்சியில் முல்லைப் பெரியாறு அணை, காவிரி நதிநீர் பிரச்னை ஆகியவற்றில் தமிழகத்தின் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது. வறட்சி மற்றும் இயற்கை சீற்றங்களால் விவசாயத்தைக் கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்ட விவசாயிகள், தானே புயல் பாதித்த பகுதிகளில் அரசு மேற்கொண்ட சீரமைப்பு பணிகள், விவசாயிகளுக்கு வழங்கிய நிவாரணம், காவிரி டெல்டா விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள வறட்சி நிவாரணம், மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றால் நம்பிக்கை அடைந்து புத்துயிர் பெற்றுள்ளனர்.

கடந்த 13 ஆண்டுகளாக, மத்திய அரசில் அங்கம் வகித்துவரும் திமுக, தமிழக விவசாயிகளின் உரிமைக்கு அண்டை மாநிலங்களால் பங்கம் வரும்போது நடவடிக்கை எடுப்பதில்லை. அதிமுக ஆட்சியில் விவசாய அபிவிருத்திக்கு பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்கு நவீன விவசாய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயத் தொழிலாளர்கள் நலன்காக்க உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதிமுக விவசாய பிரிவு நிர்வாகிகள், அரசு சார்பில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகை, விவசாய மேம்பாட்டுத் திட்டம், பெரியாறு அணை, காவிரி நதிநீர்ப் பிரச்னை ஆகியவற்றில் முதல்வர் மேற்கொண்ட நடவடிக்கை, உழவர் பாதுகாப்புத் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவி ஆகியவை குறித்து பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டும்.

தமிழகத்துக்கு வழங்க வேண்டிய உரிமை மற்றும் சலுகைகளை மத்திய அரசு வழங்க மறுக்கிறது. இரு மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் பிரச்னைகளை நியாயமாகவும், சுமுகமாகவும் தீர்க்கவில்லை. தமிழகத்தின் குரல் மத்தியில் ஒலிக்க வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் அதிமுக வெற்றிபெற நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பாடுபட வேண்டும் என்றார். மாவட்ட விவசாயப் பிரிவு இணைச் செயலர் பெரியகருப்பன் நன்றி கூறினார்.

## அ.தி.மு.க. விவசாயப் பிரிவு செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்

திருப்பத்தூரில் மாவட்ட அ.தி.மு.க. விவசாயப் பிரிவு செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட விவசாயப் பிரிவுச் செயலர் உமாதேவன் தலைமை வகித்தார். விவசாயப் பிரிவு துணைத் தலைவர் எம்.சுப்பையன், இணைச் செயலர்கள் கர்ணன், சீதாராமன், துணைச்செயலர்கள் கணேசமூர்த்தி, சுப்பிரமணி, பாரதியார், ஆனைக்குட்டி பாண்டியன், பொருளாளர் தங்கவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக மாவட்ட விவசாயப் பிரிவு இணைச்செயலர் மாயழகு வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விவசாயப் பிரிவு தலைவரும் அரசு கொறடாவுமான துரை கோவிந்தராஜன், விவசாயப் பிரிவு செயலர் கு.தங்கமுத்து, சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.கோகுலஇந்திரா, முன்னாள் அமைச்சர் ராஜகண்ணப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். முன்னதாக மாவட்டச் செயலர் முருகானந்தம், சட்டப் பேரவை உறுப்பினர்கள் சோழன்.சித.பழனிச்சாமி, எம்.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட விவசாயப் பிரிவு நிர்வாகிகள், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் சித.வள்ளிசிதம்பரம், பேரூராட்சித் தலைவர்கள் சோமசுந்தரம், சஞ்சீவிராஜா, லெட்சுமிபிரியா, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலர் சேவியர், நகரத் துணைச் செயலர் பிரேம்குமார்பிரிதிவிராஜ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஒன்றிய விவசாயப் பிரிவுச் செயலர் சி.மாணிக்கம் நன்றி கூறினார்.

## அழிந்து வரும் காங்கேயம் இன மாடுகளை காப்பாற்ற வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை

அழிந்து வரும் காங்கேயம் இன மாடுகளை காப்பாற்றுவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என மாடு வளர்க்கும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காங்கேயம் காளைகளுக்கான கண்காட்சி மற்றும் சிறந்த காளை, மாடுகளுக்கான போட்டி காங்கயம் தாலுகா, வெள்ளக்கோவில் அருகே ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மையம் மற்றும் காங்கேயம் கால்நடை இன விருத்தியாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற இப் போட்டியில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் கலந்து கொண்டன.

பூச்சிக் காளை, எருது, மயிலை மாடு, செவலை மாடு, காரி மாடு உள்பட பல வகைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்தக் கண்காட்சி குறித்து சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மைய பொறுப்பாளர் கே.எஸ்.எம்.கார்த்திகேயன் கூறியது:

காங்கயம் இனக் காளை கண்காட்சி ஆண்டுதோறும் நடத்தி வருகிறோம். 1990-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் 11 லட்சம் மாடுகள் இருந்தன. 2000-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 4 லட்சம் மாடுகள் இருந்தன. 2010-ம் ஆண்டு கணக்கெடுப்பு நடைபெறவில்லை. கணக்கெடுப்பு நடைபெற்றிருந்தால், சுமார் 2.5 லட்சம் மாடுகள் மட்டுமே இருப்பது தெரியவரும்.

தமிழ்நாட்டில் 6 வகையான மாடு இனங்கள் உள்ளன. அதில் கொங்கு பகுதியில் உள்ள காங்கேயம் காளை இனமும் ஒன்று. இந்த வகை மாடுகளைப் பராமரிப்பதற்கு அதிக செலவு பிடிக்கும் என்பதால், விவசாயிகளிடம் தற்போது மாடு வளர்க்கும் ஆர்வம் குறைந்து வருகிறது. அரசாங்கம் காங்கயத்தில் அரசு ஒரு பண்ணை அமைத்து, விவசாயிகளுக்கு கன்றுகளை வழங்கினால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்றார்.

திருப்பூர், காளிபாளையம் பகுதியைச் சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி என்ற விவசாயி கூறியது: ÷50 மாடுகள் வளர்த்து வருகிறேன். வறட்சியின் காரணமாக தற்போது தீவனத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதே நிலை தொடர்ந்தால், வருங்காலத்தில் காங்கேயம் இன மாடுகளை புத்தகத்தில் மட்டுமே பார்க்க முடியும்.

அரசாங்கம் மானிய விலையில் தீவனம் வழங்கினால்தான், அழிந்து வரும் காங்கேயம் இன மாடுகளை காப்பாற்ற முடியும் என்றார்.

சிறந்த காளை, மாடுகளுக்கான போட்டி நடைபெற்றது. இதில், நடுவர்களாக கால்நடை மருத்துவ நிபுணர் பன்னீர்செல்வம் தலைமையிலான குழுவினர் செயல்பட்டனர். மயிலை, செவலை, காரி, நெட்டை, குட்டை, எருது, பூச்சிக் காளை, வண்டிக்காளை, கிடாரி ரக காளைகள் போட்டியில் பங்கேற்றன.

போட்டியில் எருது அல்லது வண்டிக்காளை பிரிவில் 3-வது பரிசு பெற்ற பழையகோட்டை ஊராட்சி, கள்ளியங்கிணறு கிராமத்தைச் சேர்ந்த சி.ஆண்டிவேல் கூறுகையில், விவசாயத்துக்கு நவீன உபகரணங்கள் வந்துவிட்ட சூழ்நிலையில், வண்டிக் காளைகளை தீவனம் போட்டு வளர்ப்பது என்பது மிகவும் கடினமான பணி. இந்த மாடுகளைக் காப்பாற்ற நிறைய செலவு செய்ய வேண்டியுள்ளது. அரசும் உதவினால் இந்த மாடுகளை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும் என்றார்.

காங்கயம் காளை பிரிவு போட்டியில் முதல் பரிசு வேட்டைக்காரன்புதூர் அஸ்வின், 2-வது பரிசு வேலப்பநாய்க்கன்வலசு ஈஸ்வரமூர்த்தி, 3-வது பரிசு செம்மாண்டம்பாளையம் சக்திகுமார் ஆகிய உரிமையாளர்களுக்கு கிடைத்தது.

## மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் விரைவில் முதலிடம் பிடிக்கும்: வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம்

மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் விரைவில் முதலிடத்தைப் பிடிக்கும் என்று வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கூறினார்.

ஈரோட்டில் ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்ட உழவன் உற்பத்தியாளர் நிறுவனத்தில் மஞ்சள் ஏல மையத்தை தொடங்கி வைத்து அவர் பேசியது:

இந்தியாவில் மஞ்சள் சீசனில் 1 கோடி மூட்டை மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் 2-ஆவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டு வரும் நவீன பாசன முறைகளால் மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் விரைவில் முதலிடத்தைப் பிடிக்கும்.

பருவமழை பொய்த்துவிட்டதால் மஞ்சள் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும். இருப்பினும், மஞ்சள் விவசாயிகள் சொட்டு நீர்ப் பாசனத்துக்கு மாறினால் இந்த பாதிப்பை ஓரளவு தடுக்க முடியும்.

தமிழகத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசன கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 5 ஏக்கருக்கு குறைவாக இருக்கும் விவசாயிகளுக்கு இவை 100 சதவீத மானியத்தில் கிடைக்கும். மற்றவர்களுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசன கருவிகள் கிடைக்கும்.

மஞ்சளுக்கு சொட்டு நீர்ப் பாசனத்தை பயன்படுத்தினால் 1 ஏக்கருக்கு பாசனமாகும் நீரை, 5 ஏக்கருக்கு பயன்படுத்த முடியும். தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ரூ.2,400 கோடி நிவாரண உதவித் தொகையை முதல்வர் அறிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும் அரசிதழில் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை வெளியிட மத்திய அரசு சரியான முடிவு எடுக்கவில்லை. இது குறித்து மத்தியில் உள்ள திமுக, காங்கிரஸ் அமைச்சர்கள் வாய்திறக்க மறுக்கின்றனர் என்றார்.

## வேளாண் விளைபொருள்களுக்கு விரைவில் விலை நிர்ணயம்: பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம் தகவல்

வேளாண் விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் முடிவை முதல்வர் ஜெயலலிதா விரைவில் அறிவிப்பார் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.இராமலிங்கம் கூறினார்.

விவசாயிகள் இணைந்து உருவாக்கிய உழவன் உற்பத்தியாளர் நிறுவனத்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்து அவர் பேசியது:

விவசாயத்துக்கு அதிமுக அரசு எப்போதும் முன்னுரிமை கொடுத்து வருகிறது. டெல்டா மாவட்டங்களை மட்டுமன்றி சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக முதல்வர் அறிவித்துள்ளார்.

இம்மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. ஆனால், விவசாயிகள் படும் கஷ்டத்தை உணர்ந்த முதல்வர் தாமாகவே இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

தண்ணீருக்காக தமிழகம் அண்டை மாநிலங்களைத்தான் நம்பியிருக்கிறது. ஆனால், அண்டை மாநிலங்கள் தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கின்றன. தமிழகத்தில் உள்ள 60 சதவீத மக்கள், காவிரி நீரைத் தான் குடிநீராக பயன்படுத்துகின்றனர். உச்சநீதிமன்றம் வரை சென்று காவிரியில் தண்ணீர் பெற முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார்.

2007-ஆம் ஆண்டு வெளிவந்த காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட திமுக அரசு துளியும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் பிப்.20-ஆம் தேதிக்குள் மத்திய அரசிதழில் காவிரி தீர்ப்பை வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இது விவசாயிகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. வேளாண் விளை பொருள்களுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்கவில்லை என்ற ஏக்கம் விவசாயிகளிடம் உள்ளது. வேளாண் விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் அறிவிப்பை முதல்வர் விரைவில் வெளியிடுவார். இதற்கான குழுவையும் அவர் அறிவிப்பார் என்றார்.

விழாவில், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், ஈரோடு மேயர் ப.மல்லிகா பரமசிவம், மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம், இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார், உழவன் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் நல்லசாமி, இணைத் தலைவர் வெங்கடேஸ்வரன், ஈரோடு மாவட்ட அனைத்துத் தொழில் வணிகச் சங்கங்கள் கூட்டமைப்புத் தலைவர் என்.சிவநேசன், சக்திமசாலா நிறுவனத் தலைவர் பி.சி.துரைசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சின்னசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## காவிரி நீர் நாளை மேட்டூருக்கு வரும்

கர்நாடக மாநிலம், கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து திறக்கப்பட்ட காவிரி நீர் செவ்வாய்க்கிழமை மேட்டூருக்கு வரும் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக, காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து 2 டிஎம்சி தண்ணீரை உடனடியாகத் திறந்து விட உச்ச நீதிமன்றம் கடந்த திங்கள்கிழமை (பிப்.4) உத்தரவிட்டது. இதையடுத்து, அணையிலிருந்து அன்று இரவு 8 மணியளவில் வினாடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு அணையிலிருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

இதனிடையே நீதிமன்ற உத்தரவுப்படி, கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து கர்நாடக அரசு காவிரி நீரை சனிக்கிழமை திறந்து விட்டது.

இந்தத் தண்ணீர் 182 கிலோமீட்டர் தொலைவுள்ள மேட்டூர் அணையை 36 மணிநேரத்தில் வந்தடைய வேண்டும். ஆனால், காவிரி ஆறு வறண்டு பல இடங்களில் பள்ளங்கள் உருவாகியுள்ளதால், தண்ணீர் அணையை வந்தடைய காலத் தாமதம் ஏற்படுவதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, தமிழகத்திற்கு காவிரி நீர் திறக்கப்பட்டதால், கர்நாடகத்தில் நிலவி வரும் பதற்றத்தையடுத்து, தமிழக- கர்நாடக எல்லையான பாலாற்றில் கர்நாடக போலீஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

### தண்ணீரின்றி கருகும் நெற்பயிர்கள்

தோவாளை வட்டம், கடுக்கரை சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் தண்ணீரின்றி கருகி வரும் நெற்பயிர்களை வனத்துறை அமைச்சர் கே.டி.பச்சைமால் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார்.

பருவமழை பொய்த்ததாலும், அணைகளில் நீர்மட்டம் குறைந்ததாலும், குமரி மாவட்டத்தில் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி வருகின்றன. குறிப்பாக, தோவாளை வட்டத்துக்குள்பட்ட பகுதிகளில் சுமார் 325 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன.

இந்நிலையில் அமைச்சர் கே.டி. பச்சைமால் கடம்பபடிவிளாகம் காலனி, சென்னீர்கோணம், செட்டிமேடு, கடுக்கரைபள்ளம், கொள்ளிவச்சான்மேடு, காடேற்றிபற்று, பரப்புவிளைமேடு மற்றும் சென்பகராமன்புதூர் பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் விவசாயிகளிடம் கூறியதாவது:

அணைகளில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை பாசனத்துக்கு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். அணைகளில் இருப்பில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி, முடிந்தவரை கருகும் நெற்பயிர்களைக் காப்பாற்ற மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளும், கிடைக்கும் குறைந்த அளவு தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி நெற்பயிர்களைக் காப்பாற்ற மாவட்ட நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர்.

மாவட்ட வருவாய் அலுவலர் பழனிச்சாமி, சார் ஆட்சியர் சங்கர்லால் குமாவத், செயற்பொறியாளர் சுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் செய்யது அகமது மீரான்ஜீ, வேளாண்மை துணை இயக்குநர் நாகமணிபிள்ளை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஹரிராம், வட்டாட்சியர் வசந்தராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தாணுபிள்ளை, ஊராட்சித் தலைவர்கள் வள்ளிநாயகம்,பொன்ராஜ், அதிமுக தொழிற்சங்கச் செயலர் காரவிளை செல்வன், ஒன்றியச் செயலர் கே.சி.யூ. மணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஆலோசனை

குமரி மாவட்டத்தில் வறட்சியிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் ஜே. ஜேன் சுஜாதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இந்திய வானிலைத் துறை ஐஎம்டி மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உலக தொலைத் தொடர்பு காரணிகளான எல் நினோ சதர்ன் ஆசிலேஷன், பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடலில் மேற்பரப்பு வெப்பநிலை ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஆஸ்திரேலியா ரெயின்மேன் என்னும் மென்பொருள் மூலம் பருவமழை கணிக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்துக்கான வானிலை முன்னறிவிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரவலாக வானிலையில் தொடர்ந்து வறட்சி நிலவி வருவதால், நாற்றங்கால் செடிகளுக்கு போதுமான தண்ணீர் ஊற்ற வேண்டும். வளர்ந்த நல்ல மிளகு, வளர்ந்த மரவாசனை பயிர்களான கிராம்பு, ஜாதிமரம், குடம்புளி, சர்வசுகந்தி, இலவங்கப்பட்டை போன்ற மரவாசனைப் பயிர்களின் வேர்ப்பகுதியில் வட்ட பாத்தி அமைத்து, தென்னை நார்க் கழிவுகளை இட்டு நீர் ஊற்றினால் வறட்சியைக் கட்டுப்படுத்தி மரவாசனைப் பயிர்களை காக்க முடியும்.

காற்றின் வெப்பநிலை அதிகமாக இருப்பதால் உலர்த்த வேண்டிய விவசாயப் பொருள்களான நல்லமிளகு, கிராம்பு போன்றவைகளை உலர்த்தி எடுக்கலாம். இனிவரும் நாள்களில் 13 மி.மீ. மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

11.02.2013 A.M

---

## மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் முதலிடம்

ஈரோடு: ஈரோட்டில், ""மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் பெறும்," என்று அமைச்சர் தோப்பு வெங்கடாச்சலம் பேசினார்.ஈரோட்டில் நடந்த உழவன் மஞ்சள் விற்பனை மைய துவக்க விழாவில், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் பேசியதாவது:மஞ்சள் விற்பனையில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் மழை இல்லாத நிலையிலும், கிடைக்கும் நீரை வைத்து விவசாயம் செய்து வருகின்றனர். சிறு, குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் மானியத்துடன் சொட்டு நீர் பாசனத்துக்கு முதல்வர் வழி செய்துள்ளார்.கூலி ஆள் பற்றாக்குறை, சம்பள உயர்வு, தண்ணீர் பற்றாக்குறைக்கு சொட்டு நீர் பாசனம் உதவும். தமிழக அரசின் சிறப்பு திட்டங்களால், விவசாயிகள் பயன்பெற்று, மஞ்சள் உற்பத்தியில் தமிழகம் முதல் இடத்தை பிடிக்கும்.பவானிசாகரும், ஈரோடு மாவட்டமும் வறண்டுள்ளது. கர்நாடகா அரசு தமிழகத்துக்கு தண்ணீர் தர மறுக்கிறது. காவிரி நடுவர் மன்ற தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட உச்சநீதிமன்றத்தில் முதல்வர் உத்தரவு பெற்றுள்ளார். அரசிதழில் தீர்ப்பு வெளியிடப்பட்டால், கர்நாடகா அரசு கட்டாயம் தமிழகத்துக்கான தண்ணீரை விட்டே தீரவேண்டும். அல்லது, ராணுவத்தினர் பாதுகாப்புடன் தண்ணீர் திறந்து விடப்படும்.தமிழகத்தை தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற முதல்வர், "விஷன்-2023' திட்டத்தை அறிவித்து, கடந்த பட்ஜெட்டில் அதற்கான அடிப்படை திட்டங்களை வகுத்துள்ளார். வரும் பட்ஜெட்டில், அதற்கான விஸ்தரிப்பு திட்டங்களை அறிவிக்க உள்ளார்.விவசாயத்துக்கு முன்னுரிமை கொடுத்து, முதல்வர் ஜெயலலிதா செயல்படும் நிலையில், டெல்டாவிலும், தமிழகத்திலும் முழு வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சி நிவாரணமாக வழங்க, 2,400 கோடி ரூபாயை முதல்வர் ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளார். வேறு எந்த அரசும் செய்யாத சாதனையாகும்.இவ்வாறு அவர் பேசினார்.அமைச்சர் ராமலிங்கம், கலெக்டர் சண்முகம், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார், மைய தலைவர் நல்லசாமி, இணைத்தலைவர் வெங்கடேஸ்வரன், அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் சிவநேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## தேயிலை ஏலத்தில் விலை உயர்வு

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏலத்தில், கிலோவுக்கு ஒரு ரூபாய் விலை ஏற்றம் காணப்பட்டது.குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் ஆறாம் ஏலம், கடந்த 7 மற்றும் 8ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 14.02 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், 10.41 லட்சம் கிலோ இலை ரகமும், 3.61 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.மொத்தம் 14.02 லட்சம் கிலோ தேயிலை தூளில் சதவீதம் விற்பனையானது. இந்த வாரம் ஒரு ரூபாய் விலை ஏற்றம் காணப்பட்டது. 85 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக கிராஸ்ஹில் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 185 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக சாம்ராஜ் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 276 ரூபாயும் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண ரகத்துக்கு 86 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை கிடைத்தது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 86 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 14 மற்றும் 15ம் தேதிகளில் நடக்கும் 7வது ஏலத்துக்கு மொத்தம் 14.92 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில் இலை ரகம் 11.04 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.86 லட்சம் கிலோவும் அடங்கும்.

## நிலக்கடலையை காக்கநாளை பயிற்சி முகாம்

புதுக்கோட்டை: நிலக்கடலை சாகுபடியில் நோய் மற்றும் பூச்சி தாக்குதல்களை கட்டுப்படுத்தி, மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதென வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது.இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் வைரவன் வெளியிட்டுள்ள அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் மானாவாரி பயிராக நிலக்கடலை அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் கிட்டத்தட்ட, 15 ஆயிரம் ஹெக்டேரில் நிலக்கடலை சா குபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றை இலைப்பேன், அஸ்வினி போன்ற பூச்சிகள் தாக்குவதாலும், இலைப்புள்ளி, வேர் அழுகல் போன்ற நோய்கள் தாக்குவதாலும், விவசாயிகளுக்கு மகசூல் பாதிப்பு ஏற்படுகிறது.

இவ்வகையான பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களிலிருந்து நிலக்கடலை பயிர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள், இலை வழி உரக்கலவை தெளிப்பதன் மூலம் மகசூலை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் குறித்து, விஞ்ஞானிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை காலை, 10 மணிக்கு நடக்கவுள்ள இலவச பயிற்சி முகாமில், நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள்

அனைவரும் பங்கேற்கலாம். பயிற்சி முகாமுக்கு வரும்போது, சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களில் நோய் தாக்குதல்களுக்கு உள்ளான நிலக்கடலை செடிகளை கொண்டுவந்தால், அவை எந்த வகையான நோய் தாக்குதல் அல்லது பூச்சி தாக்குதல் என்பது, ஆய்வுகள் மூலம் தெளிவுபடுத்தப்படும். இவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளும் வகுத்து தரப்படும்.

## விவசாயம் பாதிப்பு வாலிபர் தற்கொலை

வாலாஜாபாத்:மனநிலை பாதிக்கப்பட்ட வாலிபர், பூச்சி மருந்து குடித்து இறந்தார்.
சின்னிவாக்கம் பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் மதியாஸ், 35; மனநிலை பாதிக்கப்பட்டவர். கடந்த, 10 ஆண்டுகளாக மனநிலை சரியில்லாமல் இருந்து உள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை, 6:00 மணிக்கு, வீட்டில் யாரும் இல்லாதபோது, வயலுக்கு வைத்திருந்த பூச்சி மருந்தினை குடித்தார்.

சிகிச்சைக்காக காஞ்சிபுரம், அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சைப் பலனின்றி, இரவு, 8:00 மணிக்கு இறந்தார்.

இது குறித்து, வாலாஜாபாத் காவல் துறையினர் விசாரிக்கின்றனர்.

## செம்மை கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்: மான்யம் வழங்கி அரசும் ஊக்கப்படுத்துகிறது

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி பகுதிகளில் செம்மை சாகுபடி என்ற நவீன முறையில் கரும்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அரசும் மான்யம் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது.கள்ளக்குறிச்சி பகுதியில் இரண்டு கூட்டுறவு ஆலைகள் உட்பட மூன்று சர்க்கரை ஆலைகள் உள்ளது. இதற்குட்பட்ட கள்ளக்குறிச்சி, மூங்கில்துறைப்பட்டு, தியாகதுருகம் பகுதிகளில் 37,500 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது.

ஏரி, அணைகள் மூலம் பாசனம் பெற்றுவந்த நிலையில் பருவமழை பொய்த்து வருவது, மின்தட்டுப்பாடு, கூலி ஆட்கள் கிடைக்காதது உள்ளிட்ட காரணங்களால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நடவு முதல் அறுவடை வரை இயந்திர பயன்பாடு விவசாயிகளுக்கு தெம்பூட்டியுள்ளது. அத்துடன் செம்மை கரும்பு சாகுபடி முறை கரும்பு விவசாயிகளை பெரிதும் கவர்ந்துள்ளது. கள்ளக்குறிச்சி பகுதிகளில் செம்மை கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வமுடன் இறங்கியுள்ளனர்.

தண்ணீர் குறைவு, குறைந்த ஆட்களே போதுமானது, பாதிப்பின்றி பயிர்கள் வளர்வது மற்றும் அரசு மான்யம் வழங்கி ஊக்கப்படுத்துவது போன்ற காரணங்களால் ஆண்டுக்காண்டு செம்மை கரும்பு சாகுபடி பரப்பு கள்ளக்

குறிச்சி பகுதிகளில் அதிகரித்து வருகிறது.

சாதாரண முறையில் நடவுக்கு ஏக்கருக்கு 4 மெட்ரிக் டன் கரும்பு தேவைப்பட்ட நிலையில் செம்மை கரும்பு சாகுபடி முறையில் 500 கிலோ கரும்பு மட்டும் போதுமானதாக உள்ளது.

கரும்பை பருசிவல் செய்து ட்ரேவில் எரு, மணல், செம்மண் ஆகிவற்றுடன் சேர்த்து நிழல் வலை கூடாரத்தில் வைத்து நாற்று உற்பத்தி செய்யப்பட்டு வயலில் நடப் படுகிறது. ஒரு ஏக்கருக்கு 5,000 கரும்பு நாற்றுகளே போதுமானது.

கரும்பு நிழல் வலை அமைப்பதற்கு வேளாண்மை துறை 50,000 ரூபாயும், கூட்டுறவு சர்க்கரை ஆலை 50,000 ரூபாயும் மான்யமாக வழங்கி விவசாயிகளை ஊக்குவிக்கிறது. அதனால் கள்ளக் குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதிகளில் நாற்று தயார்படுத்த 100 நிழல் வலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

செம்மை கரும்பு சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் அமைக்க பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம், சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மான்யம் வழங்கப்படுகிறது. சாதாரண நடவு முறையில் பயிர் செய்யப்பட்ட கரும்பை விட கூடுதலாக விளைச்சலும் கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுபோன்ற காரணங்களால் கள்ளக்குறிச்சி பகுதிகளில் தற்போது 500 ஏக்கர் பரப்பளவில் செம்மை சாகுபடி முறையில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ளது.

### கரும்பு அறுவடை இயந்திரம் விவசாயிகளுக்கு வழங்கும் விழா

விக்கிரவாண்டி : முண்டியம்பாக்கம் ராஜ் ஸ்ரீ சர்க்கரை ஆலையில் விவ சாயிகளுக்கு இயந்திரம் வழங்கும் விழா நடந்தது.

முண்டியம்பாக்கத்தில் உள்ள சர்க்கரை ஆலை வளாகத்தில் நடந்த விழாவிற்கு ஆலையின் பொதுமேலாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். கரும்பு மேலாளர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். துணை மேலாளர் முத்துக்குமரன் வரவேற்றார்.

விழுப்புரம் ஸ்டேட் பாங்க் கிளை மேலாளர் ரவிச்சந்திரன், விவசாயிகளுக்கு கரும்பு சோலையை தூளாக்கும் டிராக்டருடன் கூடிய இயந் திரத்தை வழங்கினார்.

விழாவில் கரும்பு மேலாளர் ராஜேந்திரன் பேசியதாவது:

கரும்பு அறுவடைக்கு பின் சோலையை எரிக்கும் போது பயிர் முளைப்பு இழப்பு ஏற்படுகிறது. இதை தடுக்கும் வகையில் சோலையை தூளாக்கும் இயந்திரம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. சோலையை தூளாக்குவதால் மண்ணில் உள்ள ஈரப் பதம் காக்கப்பட்டு வறட்சியை தாங்கும் சக்தியை பெறுகிறது.

மேலும் களைகள் முளைப்பது தடுக்கப்படுகிறது. சோலைகள் தூளாகி மண்ணில் மக்குவதால் சிறந்த உரமாக பயன்படுவதுடன், கரும்பை தாக்கும் இளம் குருத்துப்புழு தாக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது.


இவ்வாறு மேலாளர் ராஜேந்திரன் பேசினார்.

செஞ்சி மற்றும் முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலை பகுதியை சேர்ந்த 13 விவசாயிகளுக்கு சோலை தூளாக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது. விழுப்புரம் அரசு அக்ரோ சர்வீஸ் உரிமையாளர் முத்துக்குமரன், கரும்பு விரிவாக்க அலுவலர்கள் , விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

சேந்தமங்கலம்: சேந்தமங்கலம் வட்டார வேளாண் துறை மூலம், விதை கிராமம் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், பி.டி.ஓ., அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் சண்முகம் தலைமை வகித்து, விதை கிராம திட்டத்தின் நோக்கங்கள் பற்றியும், விதையின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். வேளாண் அலுவலர் ஹேமலதா, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தார்.துணை வேளாண் அலுவலர் சிவராஜன் பயறுவகைகள் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றியும், விதைச்சான்று அலுவலர் முருகேசன், தரமான விதை உற்பத்தி நடைமுறைகள் குறித்தும் பேசினர்.சேந்தமங்கலம் வட்டாரத்தை சேர்ந்த, 100 முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். பயிற்சியின்போது, கருத்துக் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தது. ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவலர்கள் பாண்டித்துரை, செங்கோட்டுவேல், செந்தில்குமார், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

## முன்பேர சந்தைகளில் ரூ.136 லட்சம் கோடிக்கு வர்த்தகம்



புதுடில்லி:நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி 15ம் தேதி வரையிலான காலத்தில், நாட்டில் உள்ள முன்பேர வர்த்தக சந்தைகளில், 136.51 லட்சம் கோடி ரூபாய்க்கு, வர்த்தகம் நடைபெற்றுள்ளது.இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தை (144.31 லட்சம் கோடி ரூபாய்) விட, 5.40 சதவீதம் குறைவாகும் என, பார்வர்டு மார்கெட்ஸ் கமிஷன் (எப்.எம்.சி.,) தெரிவித்துள்ளது.

விளைபொருட்கள்:உள்நாட்டில் செயல்படும், முன்பேர சந்தைகளில், தங்கம், வெள்ளி, எரிசக்தி, வேளாண் விளைபொருட்கள் உள்ளிட்டவற்றின் மீது வர்த்தகம் நடைபெற்று வருகிறது.மதிப்பீட்டு காலத்தில், வேளாண் விளைபொருட்கள் மீதான வர்த்தகம், 12.80 சதவீதம் வளர்ச்சிகண்டு, 15.91 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 17.95 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்கள் மீதான வர்த்தகம், 24.56 சதவீதம் வீழ்ச்சிகண்டு, 83.78 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 63.21 லட்சம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது. எரிசக்தி:தாமிரம் உள்ளிட்ட உலோகங்கள் மீதான வர்த்தகம், 17.88 சதவீதம் உயர்ந்து, 21.62 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 25.49 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

எரிசக்தி பொருட்கள் மீதான வர்த்தகம், 29.95 சதவீதம் அதிகரித்து, 22.97 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 29.86 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.நடப்பாண்டு, ஜனவரி, 1 முதல் 15ம் தேதி வரையிலான காலத்தில், முன்பேர சந்தைகளில், 6.89 லட்சம் கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது. இது, சென்ற ஆண்டின், இதே காலத்தை (7.08 லட்சம் கோடி ரூபாய்) விட, 2.65 சதவீதம் குறைவாகும்.தாமிரம்:கணக்கீட்டு காலத்தில், வேளாண் விளைபொருட்கள் மீதான வர்த்தகம், 31.33 சதவீதம் சரிவடைந்து, 1.19 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 82,249 கோடி ரூபாயாக குறைந்துஉள்ளது.

தங்கம் மற்றும் வெள்ளி உலோகங்கள் மீதான வர்த்தகம், 7.09 சதவீதம் குறைந்து, 3.42 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 3.17 லட்சம் கோடி ரூபாயாக குறைந்துள்ளது.தாமிரம் உள்ளிட்ட உலோகங்கள் மீதான வர்த்தகம், 25.28 சதவீதம் உயர்ந்து, 1.19 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 1.50 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.எரிசக்தி பொருட்கள் மீதான வர்த்தகம், 10.06 சதவீதம் அதிகரித்து, 1.26 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, 1.39 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துஉள்ளது.

## சம்பா சாகுபடி செய்த அனைத்து விவசாயிக்கும் ரூ.20 ஆயிரம் நிவாரணம்: போராட்டம் அறிவிப்பு

தஞ்சாவூர்: "காவிரி டெல்டா விவசாயிகளுக்கும், அனைத்து சம்பா பயிர் சாகுபடி செய்த, 12 லட்சம் ஏக்கருக்கும், ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கக்கோரி, இம்மாத இறுதியில் ஒரத்தநாட்டில் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும் என தமிழக விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது.தஞ்சாவூரில் தமிழக விவசாயிகள் சங்க கூட்டம், மாநில தலைவர் டாக்டர் சிவசாமி தலைமையில் நடந்தது. மாவட்ட தலைவர் சுகுமாறன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து மாநில தலைவர் சிவசாமி கூறியதாவது:காவிரி நீர் வராததால் பயிர் கருகியதற்கு காவரி டெல்டா விவசாயிகளுக்கு தமிழக அரசு ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் இழப்பீடு தருவதாக அறிவித்துள்ளது.

ஆனால் இது அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்காது. 12 லட்சம் ஏக்கர் சம்பா பயிர் செய்ததில், மூன்று லட்சத்து, 61 ஆயிரம் ஏக்கருக்குத்தான் இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள, எட்டு லட்சத்து, 39 ஆயிரம் ஏக்கருக்கு இழப்பீடு அறிவிக்கப்படவில்லை. இது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.அனைவருக்கும் ஏக்கருக்கு, 20 ஆயிரம் ரூபாய் இழப்புத்தொகை அறிவிக்காவிட்டால், ö டல்டா விவசாயிகள் தற்கொலை தொடரும் என எச்சரிக்கிறேன். காவிரி டெல்டாவில் நெல் உற்பத்தி செய்ய ஏக்கருக்கு, 30 ஆயிரம் செலவாகிறது. இதில் பாதி, 15 ஆயிரம் இழப்பீடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இழப்பீடும், மொத்த சாகுபடியில், மூன்று லட்சத்து, 61 ஆயிரம் ஏக்கருக்குதான். அதாவது, மூன்றில் ஒரு பங்கு தான் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இது கண்துடைப்புதான்.
இழப்பீடு அறிவிக்கப்படாத மீதியுள்ள, எட்டு லட்சத்து, 39 ஆயிரம் ஏக்கரில், 50 சதவீதத்துக்கு கீழே தான் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், சேதத்தின் சதவீத அடிப்படையில் பின்னர் இழப்பீடு கொடுக்கப்படும் என, அரசு கூறுகிறது. காவிரி நீர் வராமல் விவசாயிகள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளபோது, சதவீத அடிப்படையில் பிரித்து இழப்பீடு கொடுப்பது ஏமாற்று வித்தை. இது ஊழலுக்கும் வழிவகுக்கும். எனவே, அனைத்து விவசாயிகளுக்கும், 20 ஆயிரம் வறட்சி நிவாரணம் அறிவிக்க வேண்டும்.இதை வலியுறுத்தி இம்மாத இறுதியில் ஒரத்தநாட்டில் உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படும். நடுவர் மன்ற தீர்ப்பை அரசிதழில் வெளியிடாமல் உச்சநீதிமன்றத் தீர்ப்பையே கர்நாடக அரசு ஏற்க மறுப்பதால், இனி நடுவர் மன்ற தீர்ப்புப்படி அடுத்த குறுவை சம்பாவுக்கு தண்ணீர் வர வாய்ப்பில்லை. எனவே, முல்லை பெரியாறு அணை போராட்டம்போல், அனைத்து காவிரி டெல்டா விவசாயிகளும் போராட்டத்தில் ஈடுபடும்

நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.அப்போது சங்கத்தின் மாவட்ட செயலாளர் சக்திவேல், ஒன்றிய செயலாளர் கண்ணன் உட்பட நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## புகையிலை விதை அறிமுக விழா

வேடசந்தூர்: வேடசந்தூர் மத்திய புகையிலை ஆராய்ச்சி மையத்தில் புதிய ரக புகையிலை விதை அறிமுக விழா நடந்தது.புதிய ரக விதைக்குழு ஆய்வுக்கு, கோவை வேளாண் பல்கலை இயக்குனர் சந்திர÷

சகரன் தலைவராகவும், பேராசிரியர் நடராஜன், திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், புகையிலை வியாபாரி பழனிக்குமார், விவசாயி கிருஷ்ண குமார், ராஜமுந்திரி மத்திய புகையிலை ஆராய்

ச்சி மைய இயக்குநர் மூர்த்தி உறுப்பினர்களாக செயல்பட்டனர். டாக்டர் சுவாமி , ""அபிராமி சி.ஆர், காமாட்சி'' புதிய ரக விதைகள் பற்றி விளக்கினார். விதைகளை அறிமுகம் செய்து, சான்றிதழை வழங்கினர்.

சான்றிதழ் குழு தலைவர் சந்திரசேகரன், ராஜமுந்திரி மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் மூர்த்தியிடம் வழங்கினார். டாக்டர் பழனிச்சாமி, வேளாண் துணை இயக்குனர் சுருளியப்பன், விவசாயி

கன்னியப்பன், பழனிச்சாமி உட்பட பலர் பங்கேற்றனர். மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் குமரேசன் நன்றி கூறினார்.

கல்லூரியில் கலைவிழா

பழநி: பழநியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் இளைஞர் நல கழகம் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.கல்லூரி முதல்வர் தேமொழி தலைமை வகித்தார். சிகை அலங்காரம், கழிவுப்பொருட்களில்,

கலைப்பொருட்கள் தயாரித்தல், கலாசார மணமக்கள் அலங்காரம், தனிநபர் நடனம், மெகந்தி, பாடல், குழுவினர் நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசு, சான்றிதழ்கள்

வழங்கப்பட்டது.பேராசிரியர்கள் அனிதா, அருள்மொழி ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## மூலிகை செடி சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயி

ஆண்டிபட்டி: சர்க்கரை, இதய நோய்களுக்கான மருந்து தயாரிக்க பயன்படும் மூலிகை செடி சாகுபடியில் சேவா நிலையத்தை சேர்ந்த விவசாயி ஈடுபட்டுள்ளார்.ஆண்டிபட்டி பகுதியில் நீர் ஆதாரமுள்ள வளமான

செம்மண் நிலங்கள் கிழங்கு வகை சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. சர்க்கரைவள்ளி, கருணை, கப்பை கிழங்குகள் விளைந்த நிலத்தில் தற்போது விவசாயி பொன்னையா என்பவர் "போலேஸ்' என்னும் மூலி

கைச்செடி சாகுபடியில் ஈடுபட்டுள்ளார். அவர் கூறியதாவது: நான்கு ஏக்கர் நிலத்தில் "போலேஸ்' மூலிகை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. செடியின் தண்டுப்பகுதியை நடவு செய்த சில நாட்களில் செடிகளாக பச்சை
பசேல் என்று அடர்ந்து வளர்ந்து வருகிறது. உரம், மருந்துகள் இட்டு, பராமரிப்பு செய்த ஆறு மாதங்களில் செடியின் அடிப்பகுதியில் கிழங்கு பிடித்து விடும். நன்கு விளைந்த கிழங்குகள் தோண்டி எடுக்கப்படும்.

ஒரு டன் கிழங்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு விலை போகும். கிழங்குகள் பதப்படுத்தப்பட்ட பின் சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், இதய நோய்களை கட்டுப்படுத்தும் மருந்துகள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

ஒரு ஏக்கர் நிலத்தில் 6 முதல் 7 டன் வரை விளைச்சல் கிடைக்கும். பல ஆண்டுகளாக பருத்தி, காய்கறி, தானிய வகைகள் உற்பத்தி செய்து வந்த நிலத்தில் மாற்றுப்பயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ளது,என்றார்

## தென்னை மரத்திற்கு சொட்டுவான் மூலம் நீர் பாய்ச்ச ஆலோசனை

தேனி: தென்னை மரத்திற்கு சொட்டுவான் மூலம் நீர் பாய்ச்ச வேண்டும்,என தோட்டக்கலைத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.தேனி தோட்டக்கலை உதவி இயக்குனர் சுரேஷ் அறிக்கை: கடும் வறட்சி

நிலவுவதால் விவசாயிகள் சொட்டுநீர் பாசன அமைப்புகளை அமைத்து, தென்னை மரங்களுக்கு குழாய் மூலம் நீர் பாய்ச்சி வருகின்றனர். இப்படி நீர் பாய்ச்சுவதன் மூலம் தொடக்க பகுதியில் உள்ள மரங்களுக்கு

அதிக நீரும், துாரத்தில், கடைசி பகுதியில் உள்ள மரங்களுக்கு குறைந்த நீரும் சென்று சேரும். நீர் விரையம் ஏற்படும். விளைச்சலும், வளர்ச் சியும் சீராக இருக் காது. எனவே தென்னை மரங் களுக்கு

சொட்டுவான்கள், (டிரிப்பர்கள்) மூலம் நீர் பாய்ச்ச வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் நீரை அனைத்து மரங்களுக்கும் சமமாக பங்கிட முடியும். மரங்களின் வளர்ச்சி சீராக இருக்கும். இந்த நடை முறைகளை

விவசாயிகள் பயன்படுத்துவதால், விளைச்சலும் பெருகும். நீர் பற்றாக்குறையினை எளிதில் சமாளிக்க முடியும், என தெரிவித்துள்ளார்.

## வறட்சியால் கால்நடை தீவனத்துக்கு மாற்று ஏற்பாடு வைக்கோல் சாப்பிடும் மாடுகளுக்கு ஊறுகாய் புல்

காரைக்குடி: வறட்சியால் கோடையில் கால்நடைகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, கால்நடை துறையால்,மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.வழக்கமாக பெய்ய வேண்டிய மழையில், மூன்றில் ஒரு பங்கு மழையே இந்த ஆண்டு பெய்துள்ளது. நீர்நிலைகள் வறண்டு காணப்படுகிறது. புற்கள் இன்றி, கால்நடைகள், கண்மாய்களை ஓய்வெடுக்கும் பகுதியாக மாற்றி வருகிறது. மழையில்லாததால், நெல் விளைச்சலும், போதிய அளவில் இல்லை. வைக்கோலுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதை தவிர்க்க, பழைய பசுந்தீவனம் சேமித்தல் (சைலேஜ்) முறைகளை, கால்நடை வளர்ப்போரிடம் ஊக்குவிக்க, கால்நடை பராமரிப்பு துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதன்படி தேவைக்கு அதிகமாக கிடைக்கும்,

மக்காச்சோளம், கரும்புதோகை, வைக்கோல் உள்ளிட்டவை மூலம், ஊறுகாய் புல் தயாரிக்க அறிவுறுத்தப்பட்டு வருகிறது. குழிதோண்டி, அதில், மிஷின் மூலம் சிறு, சிறு துண்டுகளாக நறுக்கிய கரும்புதோகையை பரவவிட்டு, அதன் மீது, வெல்லப்பாகு, உப்பு கலந்த கலவையை தெளித்து, மூன்று மாதம் வரை ஊற வைத்து, மாடுகளுக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில், கூட்டுறவுபட்டியில், இத்திட்டத்தின் கீழ், கால்நடை வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஊறுகாய்புல்லை, ஒரு ஆண்டு வரை தீவனமாக பயன்படுத்தலாம். காரைக்குடி செட்டிநாடு கால்நடை பண்ணையிலும், ஊறுகாய் புல் தயாரிக்கும் முறை மேற்கொள்ளப்பட்ட வருகிறது. இதே போல், மக்காசோளம், வைக்கோல் மூலமும் ஊறுகாய் புல் தயாரிக்க வழிமுறைகளே மேற்கொள்ளப்படுகிறது.

## தக்காளி செடியில் கருகல் நோய் பாதிப்பு விவசாயிகள் கவலை

காரியாபட்டி: அதிக அளவில் பணி விழுவதால் தக்காளி செடியில் கருகல் நோய் தாக்கி, விளைச்சல் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துஉள்ளனர்.காரியாபட்டி பகுதியில் தோப்பூர், ஆவியூர், கழுவனசேரி, அரசகுளம், குரண்டி, மாங்குளம், மீனாட்சிபுரம் உட்பட பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் தோட்டப்பயிராக தக்காளி பயிரிட்டனர். மழை அளவு குறைந்ததால், கிணற்று பாசனத்தின் மூலம் விவசாயம் செய்தனர். காலத்திற்கு ஏற்ப, மருந்து தெளித்து, நல்ல விளைச்சல் ஏற்பட்டு, செடியில் காய்கள் நிரம்பி இருந்தன. இத்தருணத்தில், கடுமையான பணி விழுவதால், தக்காளி செடியில் கருகல் நோய் தாக்கியது. தாக்குபிடிக்க முடியாமல், காய்கள் வளர்ச்சியில்லாமல் செடியிலே அழுகி விழுந்தன. தற்போது, தக்காளி விலை, கிலோ எட்டிலிருந்து, 12 ரூபாய் வரை உள்ளது. இந்த ஆண்டு நல்ல வருவாய் கிடைக்கும் என விவசாயிகள் நம்பி இருந்தனர். செடிகள் கருகி விளைச்சல் பாதிக்கப்பட்டதால் கடுமையான நஷ்டம் ஏற்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தில் பாதிப்பே மிஞ்சுவதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். ராசு (தோப்பூர்) விவசாயி: இந்த ஆண்டு தக்காளிக்கு நல்ல விலை இருந்தது. கடனை அடைத்து விடலாம் என நம்பி இருந்தேன். ஒரு செடிக்கு 30 காய் முதல் 45 காய் வரை விளைந்திருந்தது.

அதிக அளவில் பணி விழுந்ததால் கருகல் நோய் தாக்கி செடிகள் அனைத்தும் கருகின. ஏக்கருக்கு 30 ஆயிரம் வரை செலவு செய்தேன். எப்படி கடனை அடைப்பது என தெரியவில்லை. பெங்களூரு தக்காளிகூட 13 ரூபாய் வரை விற்பனை ஆகிறது. நாட்டுத் தக்காளிக்கு இன்னும் கூடுதல் விலை கிடைத்திருக்கும், என்றார்.

## பந்தல் காய்கறி சாகுபடிக்கு அரசு மானியம்

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட அனைத்து வட்டாரங்களிலும், நடப்பு ஆண்டில் இறவை காய்கறி சாகுபடியாளர்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

இதுகுறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜகுமார் தெரிவித்திருப்பதாவது: தோட்டக்கலைத்துறை சார்பில், பந்தல் அமைத்து சாகுபடி செய்யும், விவசாயிகளுக்கு புடல், பீர்க்கு, பாகல் போன்ற பயிர்களில் பந்தல் அமைக்கும் செலவிற்கும், முதலில் சாகுபடி செய்யும் பயிருக்கு உரிய வீரிய ஒட்டு காய்கறி விதைக்கும் மொத்த செலவில் 50 சதம் மானியமாக ஒரு ஹெக்டருக்கு ரூ. 1லட்சத்து55 ஆயிரத்து 600 தோட்டக்கலைத்துறையின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. இந்த வாய்ப்பினை விருப்பமுள்ள விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

11.02.2013 A.M

---

## காவிரி நீர் தமிழகத்துக்கு இன்று வந்து சேரும்



ஒகேனக்கல் : உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று கர்நாடக அரசு நேற்று முன்தினம் கே.ஆர்.எஸ் அணையில் இருந்து திறந்துவிட்டுள்ள தண்ணீர் இன்று தமிழக எல்லையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காவிரி டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிரைக் காப்பாற்ற 12 டிஎம்சி தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிடக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு கோரியது. இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை அளிக்க நிபுணர் குழு அமைக்கப்பட்டது.

இந்த குழு தமிழகத்தில் ஆய்வு செய்து அறிக்கை அளித்த பிறகு, கடந்த வியாழக்கிழமை உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழகத்துக்கு 2.44 டிஎம்சி தண்ணீரை கே.ஆர்.எஸ் அணையில் இருந்து உடனடியாக திறந்து விடும்படி கர்நாடகாவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். ஆனால், இந்த தீர்ப்பை கர்நாடக அரசு ஏற்க மறுத்தது.

இதையடுத்து மாநில பாசனத்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை, அதிகாரிகளுடன் டெல்லி சென்று சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து, இந்த தீர்ப்பை மறுஆய்வு செய்யும்படி மனு தாக்கல் செய்ய முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்று முதலில் தண்ணீர் திறக்கும் படியும், பின்னர் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம்

என்றும் சட்ட நிபுணர்கள் ஆலோசனை வழங்கினர்.

அதை ஏற்று, நேற்று முன்தினம் காலை கே.ஆர்.எஸ் அணை திறக்கப்பட்டு, தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நீர் இன்று (11ம் தேதி) இரவு தமிழக எல்லையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட்டதை எதிர்த்து கர்நாடகாவில் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது. அணை பகுதிகளில் மறியல் மற்றும் முற்றுகையிடுவதை தடுக்க 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. இது புதன் கிழமை வரை நீடிக்கும்.

கே.ஆர்.எஸ் அணை யில் இருந்து ஒகேனக்கல் 140 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதனால், கே.ஆர்.எஸ் அணையில் இருந்து திறக்கப்படும் நீர் 48 மணி நேரத்தில் ஒகேனக்கல்லை வந்தடையும். அதன்படி நேற்று முன்தினம் காலை திறக்கப்பட்ட நீர், இன்று காலை அங்கு வந்து சேர வேண்டும். ஆனால் தற்போது காவிரி ஆறு வறண்டு கிடப்பதால், திறந்து விடப்பட்டுள்ள நீர் வழியில் உள்ள பள்ளங்களில் நிரம்பியும், மணல் உறிஞ்சியும் வர தாமதமாகும். இதனால் இன்று இரவு ஒகேனக்கல்லை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒகேனக்கல்லில் இருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலையில் உள்ள மேட்டூர் அணையை அங்கிருந்து 10 மணி நேரத்தில் நீர் வந்தடையும்.

13 நாள் தண்ணீர் வரும்

கர்நாடக நீர்வளத்துறை அதிகாரிகள் கூறுகையில், ''தற்போது கே.ஆர்.எஸ் அணையில் 11.3 டி.எம்.சி தண்ணீர் உள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. தமிழகத்துக்கு 2.44 டி.எம்.சி தண்ணீர் விட வேண்டும் என்றால் 13 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். இதனால் நீர் இருப்பு 8.56 டி.எம்.சியாக குறையும். அணையில் இறுதி அளவாக 4.45 டி.எம்.சி தண்ணீர் வைத்திருக்க வேண்டும். அப்படியென்றால் கர்நாடகாவின் குடிநீர் தேவைக்கு 4.11 டி.எம்.சி தண்ணீர் இருக்கும்'' என்றனர்.

## ஏப்ரலில் சர்க்கரை விலை கிலோ ரூ.2 உயரும்



புதுடெல்லி : உள்நாட்டு சர்க்கரை உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படுவதால் வரும் ஏப்ரல் மாதத்துக்கு பிறகு சர்க்கரை விலை கிலோவுக்கு ரூ.2 உயர வாய்ப்பு உள்ளது என்று மதிப்பீட்டு நிறுவனமான இக்ரா தெரிவித்துள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு வழங்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் 2012,13ம் சந்தை ஆண்டில் (அக்டோபர்,செப்டம்பர்) சர்க்கரை ஆலைகளுக்கு லாபம் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், விலை உயர்வால் ஆலைகளுக்கு நன்மை ஏற்படும்.

தற்போது சர்க்கரை உற்பத்தி குறைந்தால் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் விலை அதிகரிக்கும். டன்னுக்கு ரூ.1,000 முதல் ரூ.2,000 வரை விலை உயரலாம். தற்போது சர்க்கரை மொத்த விலை கிலோ ரூ.31 முதல் ரூ.32 ஆகவும், சில்லரை விலை ரூ.40 ஆகவும் உள்ளது.

### முட்டை விலை 3.65 காசாக நிர்ணயம்



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 10 காசு உயர்ந்து, 365 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஒரு வாரமாக முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், தற்போதைய விலையில் 10 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 355 காசாக இருந்த முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 365 காசாக நிர்ணயிக்கப்பட்டது. ‘தீவனத்தின் விலை உயர்வால் முட்டையின் உற்பத்தி செலவு

உயர்ந்து வருகிறது. இதனால் புதிதாக குஞ்சு வாங்கி விடுவதை பல பண்ணையாளர்கள் நிறுத்தி விட்டனர். இதனால், நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. இதன் காரணமாக, முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளது.

## வேளாண்மை முனைப்பு திட்டத்தில் வறட்சி நிலவும் காலத்திலும் கூடுதல் சாகுபடிக்கு வாய்ப்பு

நாமக்கல், : நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டியை அடுத்த வடவத்தூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் மத்திய மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையம் சார்பில், வேளாண்மை முனைப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டம் மூலம் வடவத்தூர் கிராமத்தில் உள்ள செங்குட்டை, ஆயிரம் குட்டை ஆகியவை கடந்தாண்டு ஜூலை மாதம் ஆழப்படுத்தப்பட்டு கரைகள் நான்கு புறமும் உயர்த்தப்பட்டன. 6 அடியாக இருந்த குட்டைகளின் ஆழம் 12 அடியாகவும், 86 அடியாக இருந்த நீளம் 120 அடியாகவும் உயர்த்தி சீரமைக்கப்பட்டன.

இதனால் சுற்றியுள்ள 13 கிணறுகள், 14 ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்தது. கடந்த அக்டோபர் முதல் 20 அடி வரை உயர்ந்து சுமார் 54 ஏக்கர் நிலப்பரப்பில் வறட்சி காலத்திலும் கூடுதல் விவசாய சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெங்காயம், ஊடு பயிராக மரவள்ளியும், சில நிலங்களில் மல்லிகையும் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 5 விவசாயிகளுக்கு பிளாஸ்டிக் லைனிங் மூலம் தற்காலிக பண்ணை குட்டைகளும் அளிக்கப்பட்டதன் மூலம் 9.5 ஏக்கர் நிலப்பரப்பில் வெங்காயம், தீவன சோளம், காய்கறிகள், மல்லிகைப்பூ மற்றும் நெல் சாகுபடியும் செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்ட செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கும் வயல் விழா வடவத்தூரில் நடைபெற்றது. ஆந்திர மாநிலம் ஹைதராபாத் மத்திய மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மண் மற்றும் நீர்வள பாதுகாப்புத் துறை முதுநிலை விஞ்ஞானி ரஜினி தலைமை வகித்தார். மண்டல திட்ட இயக்குனர் பிரபு குமார், உழவியல் துறை முதன்மை விஞ்ஞானி ஸ்ரீனிவாசரெட்டி ஆகியோர்  மழைவளம் குறைந்த பகுதிகளுக்கு இந்த திட்டத்தின் அவசியம் குறித்து எடுத்துரைத்தனர்.

வேளாண்மை ஆராய்ச்சி நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை இணை இயக்குநர் விஸ்வநாதன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் கதிரவன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வடவத்தூர் கிராமத்தில் நிலத்தடி நீர்மட்டம்

உயர்ந்துள்ளது. இதன்மூலம், வறட்சி நிலவும் காலத்திலும் 54 ஏக்கர் நிலப்பரப்பில் கூடுதல் விவசாய சாகுபடி மேற்கொள்ளப்படும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பட்டு வளர்ப்பு விழிப்புணர்வு பயிற்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி அருகே பட்டு வளர்ப்பு குறித்து, விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது.

வேப்பனப்பள்ளி அருகேயுள்ள கொல்லப்பள்ளி கிராமத்தில் மத்திய பட்டுவாரியத்தின் சிஎஸ்எஸ் 2110 திட்டத்தின் கிழ் எல்14 சிஎஸ்ஆர்2 புதிய இன வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது. இளநிலை ஆய்வாளர் மோகீன்கான் வரவேற்றார். நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் கதிர்வேலு தலைமை வகித்து சிறப்புரையாற்றினர். மத்திய பட்டு வாரிய " சி" விஞ்ஞானி பட்டு விவசாயிகளின் சந்தேகளுக்கு விளக்கமளித்தார்.

பயிற்சி முகாமில் புதிய பட்டு வளர்ப்பு முறைகளில் மேற்கொள்வதின் அவசியம் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பட்டு விவசாயிகளுக்கு கூறப்பட்டது. பயிற்சியில் கொல்லப்பள்ளி, காசிரிகானப்பள்ளி, கொட்டாவூர் கிராமத்தை சேர்ந்த பட்டு விவசாயிகள் கலந்து கொண்டனர். தொழில்நுட்ப உதவியாளர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

## மத்தூர் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் வட்டாரத்தில் நெற்பயிர் பாதுகாப்பு நிர்வாக பயிற்சி விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மத்தூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு நிர்வாகம் குறித்த பயிற்சி பெரமனூர் கிராமத்தில் நடந்தது. இப்பயிற்சியை அட்மா விவசாயிகள் ஆலோசனைக்குழு தலை வர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார். வேளாண் மை உதவி இயக்குநர் ரவிந்தர் நெற்பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி மற்றும் பூஞ்சான நோய்கள் பற்றி விரிவாக கூறினார். மேலும் நெற்பயிரில் அதிக பாதிப் பினை ஏற்படுத்தும், சாறு உறிஞ் சும் பூச்சிகள், தண்டு துளைப்பான் மற்றும் புகையான் பூச்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த முறை களைப் பற்றியும் விளக்கமளித்தார்.

அதைத் தொடர்ந்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வராஜ், நேரடி நெல் விதைப்பு போன்ற புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி செலவினை குறைத்து அதிக மகசூல் மற்றும் வருவாயினை பெறும் வழிமுறைகளை பற்றி கூறினார்.

மண் மாதிரி எடுத்தல், உயிரின விதை நேர்த்தி மற்றும் பூஞ்சான் விதை நேர்த்தி ஆகியவை குறித்து

செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் மாதையன், தொழில்நுட்ப வல்லுநர்கள் முகமது ரபிக், முரளி மற்றும் மத்தூர் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு பயிற்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் வட்டாரத்தில் நெற்பயிர் பாதுகாப்பு நிர்வாக பயிற்சி விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

மத்தூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு நிர்வாகம் குறித்த பயிற்சி பெரமனூர் கிராமத்தில் நடந்தது. இப்பயிற்சியை அட்மா விவசாயிகள் ஆலோசனைக்குழு தலை வர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார். வேளாண் மை உதவி இயக்குநர் ரவிந்தர் நெற்பயிரில் சேதத்தை ஏற்படுத்தும் பூச்சி மற்றும் பூஞ்சான நோய்கள் பற்றி விரிவாக கூறினார். மேலும் நெற்பயிரில் அதிக பாதிப் பினை ஏற்படுத்தும், சாறு உறிஞ் சும் பூச்சிகள், தண்டு துளைப்பான் மற்றும் புகையான் பூச்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த முறை களைப் பற்றியும் விளக்கமளித்தார்.

அதைத் தொடர்ந்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வராஜ், நேரடி நெல் விதைப்பு போன்ற புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி செலவினை குறைத்து அதிக மகசூல் மற்றும் வருவாயினை பெறும் வழிமுறைகளை பற்றி கூறினார்.

மண் மாதிரி எடுத்தல், உயிரின விதை நேர்த்தி மற்றும் பூஞ்சான் விதை நேர்த்தி ஆகியவை குறித்து செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் மாதையன், தொழில்நுட்ப வல்லுநர்கள் முகமது ரபிக், முரளி மற்றும் மத்தூர் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
11.02.2013 A.M

## கோபி ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் விற்பனை வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

ஈரோடு

கோபி ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் விற்பனை செய்யப்படுகிறது என்று வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தகவல் தெரிவித்து உள்ளார்.

### நிலக்கடலை சாகுபடி

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை வட்டாரத்துக்கு உள்பட்ட அயலூர், வெள்ளாங்கோவில், கடுக்காம்பாளையம், பொலவக்காளிபாளையம், கொளப்பலூர், வெள்ளாளபாளையம், பொம்மநாயக்கன்பாளையம், கூகலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இறவை முறையில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

கடும் வறட்சியால் ஆழ்துளை குழாய் கிணறுகளில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால், சிக்கனமாக பயன்படுத்தி நிலக்கடலை செடிக்கு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். தற்போது கோபிசெட்டிபாளையம் வேளாண்மை வட்டார பகுதிகளில் நிலக்கடலைச்செடி செழித்து வளர்ந்து உள்ளது.

### ஜிப்சம் உரம் அவசியம்

நிலக்கடலைச்செடி விதைப்பின்போதும், களை வெட்டி மண் அணைக்கும் போதும் ஜிப்சம் உரம் இட வேண்டும் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்து உள்ளனர். ஜிப்சத்தில் கால்சியம் சத்து 18 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையும், கந்தகச்சத்து 18 சதவீதம் வரையும்

உள்ளது. இதில், கந்தகச்சத்து குறைபாட்டினால் விளைச்சல் பாதிப்பதுடன், பயிர் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு மகசூல் குறைகிறது.

இந்த நிலையில், கோபிசெட்டிபாளையத்தில் நிலக்கடலைச்செடி நன்கு வளர்ச்சி அடைந்து உள்ளதால் களை வெட்டும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். நிலக்கடலை சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற ஜிப்சம் உரத்தை இட வேண்டும் என்று வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

<u>மானிய விலையில் விற்பனை</u>

இதுகுறித்து கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:–

நிலக்கடலை மட்டுமல்லாமல் களர் மண் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள பயிர்களின் மகசூலை அதிகரிக்க ஜிப்சம் பயன்படுத்தப்படுகிறது. நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களுக்கு ஜிப்சம் உரமிட்டு, பயிர் வளத்தை அதிகரிக்கலாம். தற்போது கோபிசெட்டிபாளையம் வட்டாரத்தில் கோபி, கூகலூர், வெள்ளாங்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஜிப்சம் உரம் 50 சதவீதம் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ.750 மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, ஜிப்சம் உரம் தேவைப்படும் விவசாயிகள் தங்களுடைய ரேஷன் கார்டு நகலுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன் பெறலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் கொ.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

சிவகிரி

வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கொ.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>செயற்குழு கூட்டம்</u>

கொங்குநாடு முன்னேற்ற கழகத்தின் ஈரோடு கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் சிவகிரியில் நடைபெற்றது. சிவகிரி வட்டார தலைவர் சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் வஜ்ரவேல் வரவேற்று பேசினார்.

இதில் தலைமை நிலைய செயலாளர் எஸ்.சூரியமூர்த்தி, மாநில பொருளாளர் கே.கே.சி.பாலு ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:–

ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம்

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதித்த காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகளுக்கு நிலவரி ரத்து செய்ய உத்தரவிட்ட முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து கொள்வது.

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்நிய முதலீட்டை இந்தியாவில் அனுமதிக்கும் முடிவை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும்.

பொதுச்செயலாளர் ஈஸ்வரன் தலைமையில் புதிய கட்சி தொடங்கி, புதிய கொடியை அறிவிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கிழக்கு மாவட்ட தலைவர் சுரேஷ்பொன்னுவேல், பொருப்பாளர் கார்மேகம், கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர் கனகராஜ், கொடுமுடி ஒன்றிய பொருளாளர் பழனிச்சாமி, தலைமை கழக பேச்சாளர் தண்டபானி உள்பட பலர் கலந்து கொண்டனர்.